பணியாளர்களுக்கான ஒரு வழிகாட்டி

# பணிக்காலக் காய இழப்பீடு



MINISTRY OF MANPOWER

# பணியாளர்களுக்கான பணிக்காலக் காய இழப்பீடு என்பது என்ன?

உங்களின் பணி காரணமாக நீங்கள் காயமடைந்தாலோ அல்லது உடல்நலம் பாதிக்கப்பட்டாலோ, உங்கள் முதலாளியிடமிருந்து நீங்கள் இழப்பீடு கோர முடியும்.

பணி தொடர்பான காயங்கள் அல்லது நோய்களுக்காகச் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்காமல், பணியாளர்கள் இழப்பீடு கோருவதற்கு பணிக்காலக் காய இழப்பீட்டுச் சட்டம் (WICA) வழிவகுக்கிறது.

## நான் WICA-இன் கீழ் பாதுகாக்கப்படுகிறேனா?

### பாதுகாக்கப்படுகிறீர்கள்

- நீங்கள் "ஒரு சேவை ஒப்பந்தத்தின்" கீழ் பணிபுரிகின்ற ஒரு பணியாளர்.

### பாதுகாக்கப்படவில்லை

- சிங்கப்பூர் ஆயுதப் படையின் ஏதேனும் உறுப்பினர்
- சிங்கப்பூர்க் காவல் துறை, சிங்கப்பூர்க் குடிமைத் தற்காப்புப் படை, மத்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் சிங்கப்பூர்ச் சிறைச் சேவையின் சீருடை அணிந்த அதிகாரி
- சுயதொழில் புரிபவர் / தனித்தியங்கும் ஒப்பந்ததாரர்
- பணிப்பெண்

### கேள்வி 1

கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் என்னால் இப்போதும் இழப்பீட்டைக் கோர முடியுமா...

(i) நான் எனது முதலாளிக்காக இப்போது பணிபுரியவில்லை அல்லது எனது வேலை நியமனம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது என்றால்?

(ii) நான் ஒரு வெளிநாட்டு ஒப்பந்தப் பணியில் இருந்த வேளையில் இந்த விபத்து நிகழ்ந்தது என்றால்?

ஆம், நீங்கள் இழப்பீட்டைக் கோரலாம்.

## நான் பணியில் காயமடைந்தேன். நான் என்ன செய்ய வேண்டும்?



1. மருத்துவ உதவியை நாடுங்கள். நீங்கள் விரைவாக உங்கள் முதலாளிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
   - அவர் மனிதவள அமைச்சுக்குத் (MOM) தகவல் தெரிவிப்பார்.
2. உங்களின் அசல் மருத்துவச் சான்றிதழை (MC) உங்கள் முதலாளியிடம் கொடுக்கவும்.
   - உங்களின் மருத்துவ விடுப்பு ஊதியங்களைக் கோரவும்.
3. உங்களின் அசல் மருத்துவக் கட்டண ரசீதுகளை உங்கள் முதலாளியிடம் கொடுக்கவும்.
   - நீங்கள் முதலில் தொகை செலுத்தியிருந்தால், அவர் அத்தொகையை உங்களுக்குத் திருப்பித் தர வேண்டும்.
   - உங்களின் மருத்துவ விடுப்புகள் மற்றும் மருத்துவக் கட்டண ரசீதுகளின் நகலை உங்களிடம் வைத்துக்கொள்ளுங்கள்.
4. உங்கள் முதலாளி விபத்து குறித்து MOM-இடம் தகவல் தெரிவித்துவிட்டாரா என்று அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.
5. நீங்கள் WICA அல்லது பொதுச் சட்டத்தின் கீழ் கோரல் ஒன்றைத் தாக்கல் செய்ய விரும்புகிறீர்களா என்பதை முடிவுசெய்யவும்.
   - நீங்கள் ஒரு வழியின் மூலமாக மட்டுமே கோர முடியும்.

## எனது பணிக்காலக் காயத்தை எனது முதலாளி எப்போது MOM-யிடம் தெரிவிக்க வேண்டும்?




கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் உங்கள் காயத்தைப் பற்றி உங்கள் முதலாளி தகவல்தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்:

- நீங்கள் குறைந்தது 24 மணிநேரங்களுக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால், அல்லது
- உங்களுக்கு 4 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்காட்டி தினங்களுக்கு மருத்துவ விடுப்பு (தொடர்ச்சியாக அல்லது இடைவிட்டு) அளிக்கப்பட்டிருந்தால், அல்லது
- தொழில்சார்ந்த நோய் தொற்றியிருந்தால்

**பயனுள்ள உதவிக் குறிப்பு**

http://www.mom.gov.sg/iReport என்ற இணையப் பக்கத்தில் நீங்களே சுயமாக MOM-க்குத் தகவல் தெரிவிக்கலாம்

# நான் எதைக் கோர முடியும் மற்றும் எவ்வளவு தொகையைக் கோர முடியும்?

WICA-இன் கீழ், நீங்கள் சிங்கப்பூரில் பதிவுபெற்ற ஒரு மருத்துவரை <u>நாடினால் மட்டுமே</u> உங்களால் பின்வரும் வகையான இழப்பீடுகளைக் கோர முடியும்.

## வகை 1: மருத்துவச் செலவுகள்

### மருத்துவச் செலவுகள் என்பது என்ன?

பணிக்காலக் காயத்தின் காரணமாக செலுத்த வேண்டிய மருத்துவக் கட்டண ரசீதுகள்

\+


பிற கட்டணங்கள். உதாரணமாக, பணிக்காலக் காய மதிப்பீட்டு அறிக்கைகளுக்கானக் கட்டணங்கள்

**நீங்கள் அதிகபட்ச வரம்பு வரை அல்லது விபத்து நடந்த நாளில் இருந்து ஒரு ஆண்டு வரை, இதில் எது முதலில் வருகிறதோ அது வரை, மருத்துவச் செலவுகளைக் கோரலாம்.**

| இந்த விபத்து எப்போது ஏற்பட்டது? | நான் அதிகபட்சமாக எவ்வளவு தொகையைக் கோர முடியும்? |
|---|---|
| 1 ஜனவரி 2016 -க்கு முன்னர் | $30,000 |
| 1 ஜனவரி 2016 அன்று மற்றும் அதற்குப் பிறகு | $36,000 |

### கேள்வி 2

**எனது மருத்துவச் செலவுகள் $45,000 ஆகும். நான் முழுத் தொகையையும் கோர முடியுமா?**




உங்களுக்கு ஒரு விபத்து ஏற்பட்டது.

**$30,000**
ஆம், நீங்கள் முழுத் தொகையையும் கோர முடியும்.

**$10,000**
நீங்கள் $6,000 -ஐ மட்டுமே கோர முடியும்.

**$5,000**
உங்களால் தொகையைக் கோர முடியாது.

இந்த உதாரணத்தில், நீங்கள் $30,000 + $6,000 = $36,000 -ஐ மட்டுமே கோர முடியும். 30 ஜூன் 2016 அன்று ஏற்பட்ட மீதமுள்ள $4,000 மருத்துவச் செலவை உங்களால் கோர முடியாது. ஏனென்றால் உச்ச வரம்பு எட்டப்பட்டு விட்டது. மேலும் 9 மார்ச் 201 அன்று ஏற்பட்ட $5,000 செலவையும் உங்களால் கோர முடியாது. ஏனென்றால், விபத்து ஏற்பட்டு ஒரு ஆண்டுக்கும் மேலாகி விட்டது.

## வகை 2 : மருத்துவ விடுப்பு ஊதியங்கள்

### நான் எப்போது மருத்துவ விடுப்பு ஊதியங்களைக் கோர முடியும்?




பணிக்காலக் காயம் அல்லது உடல்நல நிலைமை காரணமாக உங்களுக்கு ஒரு மருத்துவர் வெளிநோயாளி மற்றும்/அல்லது மருத்துவமனை அனுமதிக்கான விடுப்பை வழங்கினால் நீங்கள் மருத்துவ விடுப்பு ஊதியங்களைக் கோர முடியும்.



நீங்கள் வழக்கமாகப் பணியில் இருக்கும் நாட்களுக்காக (பணிபுரியும் நாட்கள்) மட்டுமே உங்களால் இழப்பீட்டைக் கோர முடியும், ஓய்வு தினங்கள் அல்லது பொது விடுமுறை தினங்களுக்காகக் கோர முடியாது.

### பின்வரும் கட்டண விகிதங்கள் மற்றும் வரம்புகளுக்கு WICA உங்களுக்கு உரிமை வழங்குகிறது:

| வெளிநோயாளி மருத்துவ விடுப்பின் இந்தத் தொகைக்காக | அல்லது மருத்துவமனை அனுமதி விடுப்பின் இந்தத் தொகைக்காக | உங்கள் மருத்துவ விடுப்பு ஊதியங்கள் பின்வரும் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன |
|---|---|---|
| 14 நாட்கள் வரை | 60 நாட்கள் வரை | உங்களின் முழுமையான சராசரி மாதாந்தர வருமானங்கள் |
| விபத்து நடைபெற்ற 15வது தினம் முதல் 1 ஆண்டு வரை | விபத்து நடைபெற்ற 61வது தினம் முதல் 1 ஆண்டு வரை | உங்களின் சராசரி மாதாந்தர வருமானங்களில் 2/3 பங்கு |

### கேள்வி 3



**எனது முதலாளி என்னுடைய மருத்துவ விடுப்பு ஊதியங்கள் மற்றும் மருத்துவக் கட்டண ரசீதுகளுக்குப் பணம் அளிக்கவில்லை. நான் என்ன செய்ய வேண்டும்?**



முதலில், நீங்கள் எல்லா அசல் மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருத்துவக் கட்டண ரசீதுகளையும் உங்கள் முதலாளியிடம் சமர்ப்பித்துள்ளீர்களா என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள். அவற்றை அவர் பெற்றுக்கொண்டார் என்பதை ஒப்புகை அளிக்குமாறு அவரிடம் கேட்கவும்.

உங்களின் முதலாளி அப்போதும் உங்களுடைய மருத்துவ விடுப்பு ஊதியங்களையும் மருத்துவச் செலவுகளையும் உங்களுக்கு அளிக்கவில்லை என்றால், தயவுசெய்து எங்களுக்கு http://www.mom.gov.sg/contact-us -இல் புகார் தெரிவியுங்கள் அல்லது எங்களை மனிதவள அமைச்சு சேவைகள் மையத்தை அணுகுங்கள்.

## வகை 3 : ஒட்டுமொத்தமாக ஒரே தொகையில் இழப்பீடு

நிரந்தரத் திறனிழப்பு அல்லது மரணம் ஏற்படும் சூழ்நிலையில் இது வழங்கப்படுகிறது.

**நிரந்தரத் திறனிழப்பு - ஒரு பணியாளரின் பணிபுரிவதற்கான திறன் மீது ஒரு காயமோ அல்லது உடல்நல நிலைமையோ ஒரு நிரந்தரமான விளைவை ஏற்படுத்தும் போது**

**பணியாளருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை**
**= [பணியாளரின் சாராசரி மாதாந்திர வருமானங்கள்] x [வயது பெருக்கல் காரணி] x [% நிரந்தரத் திறனிழப்பு][1]**

*இழப்பீடு வரம்புகளுக்கு உட்பட்டது

### நான் எவ்வாறு சராசரி மாதாந்தர வருமானங்களை (AME) கணக்கிடுவது?



விபத்து நடைபெற்ற தேதிக்கு முன்னர் கடைசி 12 மாதங்களாகப் பணிக்காக வழங்கப்பட்ட வருமானங்கள்
+ மிகைநேரப் பணி ஊதியம் + உணவு செலவுத்தொகை
+ ஊக்கத்தொகை மற்றும் மற்ற எல்லா செலவுத்தொகை(கள்)



12 மாதங்கள்

**பயனுள்ள உதவிக்குறிப்பு**

உங்களின் AME-ஐக் கணக்கிடுவதற்கு, www.mom.gov.sg/calculate-ame என்ற இணையப் பக்கத்தைப் பார்வையிடவும்.

### எவை விலக்களிக்கப்படுகின்றன?

- முதலாளி மசேநி சந்தாக்கள்
- உங்களின் வேலை நியமனத்திற்குத் தொடர்புடைய ஏதேனும் சிறப்புச் செலவுகளுக்காகச் செலுத்திய பணம் (உதாரணமாகப் போக்குவரத்து செலவுத்தொகை/ ஈட்டுத்தொகை)

| இந்த விபத்து எப்போது ஏற்பட்டது? | இழப்பீடு வரம்புகள்* | |
|---|---|---|
| | **குறைந்தபட்சம்** | **அதிகபட்சம்** |
| **1 ஜனவரி 2016 -க்கு முன்னர்** | [$73,000 x % நிரந்தரத் திறனிழப்பு] | [$218,000 x % நிரந்தரத் திறனிழப்பு] |
| **1 ஜனவரி 2016 அன்று மற்றும் அதற்குப் பிறகு** | [$88,000 x % நிரந்தரத் திறனிழப்பு] | [$262,000 x % நிரந்தரத் திறனிழப்பு] |

குறிப்புகள்:
[1]% நிரந்தரத் திறனிழப்பு ஆனது, பணியாளரின் நிலைமை நிலைப்படுத்தப்பட்ட பிறகு மருத்துவரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

**மரணம் - ஒரு பணியாளரின் இறப்புக்கு ஒரு காயம் காரணமாக இருக்கும் போது**

**குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது இறந்த பணியாளரின் சார்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை**

**= [பணியாளரின்] x [வயது பெருக்கல் காரணி]**

*இழப்பீடு வரம்புகளுக்கு உட்பட்டது

| இந்த விபத்து எப்போது ஏற்பட்டது? | இழப்பீடு வரம்புகள்* | |
|---|---|---|
| | குறைந்தபட்சம் | அதிகபட்சம் |
| 1 ஜனவரி 2016 -க்கு முன்னர் | $57,000 | $170,000 |
| 1 ஜனவரி 2016 அன்று மற்றும் அதற்குப் பிறகு | $69,000 | $204,000 |

## கேள்வி 4

**எனக்கு ஒரு வழக்கறிஞர் தேவைப்படுகிறாரா?**

- இழப்பீட்டுத் தொகையானது ஒரு நிலையான சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதால், உங்கள் கோரல் தொடர்பாக உங்களுக்கு உதவ ஒரு வழக்கறிஞர் உங்களுக்குத் தேவையில்லை.
- MOM வசம் மொழிபெயர்ப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் கூடுதல் கட்டணம் எதுவுமின்றி நீங்கள் கோரலைத் தாக்கல் செய்ய உங்களுக்கு உதவலாம்.
- இந்த மொழிபெயர்ப்பாளர்கள் பின்வரும் மொழிகளில் பேச முடியும்: பெங்காலி, தமிழ், மாண்டரின், மலாய்.

## கேள்வி 5

**MOM-ஆல் உத்தரவிடப்பட்ட இழப்பீட்டுத் தொகையை எனது முதலாளி எனக்கு இன்னமும் அளிக்கவில்லை என்றால் என்ன நிகழும்?**

உங்கள் முதலாளி, உத்தரவிடப்பட்ட 21 நாட்களுக்குள் உங்களுக்குப் பணம் வழங்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், அவர் உத்தரவுக்கு இணங்கி நடக்கத் தவறியதற்காகத் தண்டிக்கப்படலாம். எனினும், இதனால் நீங்கள் இழப்பீட்டைப் பெறுவீர்கள் என்று அர்த்தமாகாது.

நீங்கள் இந்த ஆணையைச் சுயமாக 1 Havelock Square, Singapore 059724 என்ற முகவரியில் உள்ள அரசு நீதிமன்றங்களில் உள்ள நீதிமன்றக் கட்டளைகளை நிறைவேற்றும் அலுவலர்கள் பிரிவில் நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும்.நீங்கள் உதவிக்காக எங்கள் அதிகாரியைத் தொடர்புகொள்ளலாம்.

## நான் WICA கோரல் ஒன்றைத் தாக்கல் செய்ய விரும்புகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?




**உங்கள் கோரலைத் தாக்கல் செய்யுங்கள்**

- நீங்கள் கோரலைத் தாக்கல் செய்ய விரும்பினால், நீங்கள் MOM-யிடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- நாங்கள் உங்களுக்கு ஒரு விண்ணப்பப் படிவத்தை அனுப்புவோம்.
- விபத்து நடைபெற்ற தேதியில் இருந்து 1 ஆண்டுக்குப் பிறகு உங்களால் ஒரு கோரலைச் செய்ய முடியாமல் போகலாம்.

**மருத்துவ மதிப்பீடு செய்துகொள்ளுங்கள்**



- எல்லா மருத்துவச் சந்திப்புத் திட்டங்களிலும் கலந்துகொள்ளுங்கள்
- மருத்துவமனைகள்/சிகிச்சையகங்களை மாற்றக் கூடாது.
- மருத்துவமனை உங்களுக்கு எவ்வளவு காயம் ஏற்பட்டுள்ளது (உங்களின் % நிரந்தரத் திறனிழப்பு) என்பதை மதிப்பீடு செய்து, MOM-யிடம் தகவல் தெரிவிக்கும்.



**மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுங்கள்**

- நாங்கள் உங்களுக்கு, உங்கள் முதலாளிக்கு மற்றும் காப்பீட்டாளருக்கு ஒரு மதிப்பீட்டு அறிக்கையை வழங்குவோம்.

**கோரல் மற்றும் பணமளிப்பு விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளுங்கள்**



- MOM-இன் மதிப்பீட்டை யாரும் எதிர்க்கவில்லை எனில், உங்கள் முதலாளி அல்லது காப்பீட்டாளர், அறிக்கை அளிக்கப்பட்ட 21 நாட்களுக்குள் உங்களுக்குப் பணம் வழங்க வேண்டியது அவசியமாகும். உங்கள் முதலாளி உங்களின் இழப்பீட்டில் இருந்து பணத்தைப் பிடித்தம் செய்ய முடியாது (உதாரணமாக, மருத்துவச் செலவுகள் மற்றும் மருத்துவ விடுப்பு ஊதியங்கள்).
- ஏதேனும் எதிர்ப்பு இருந்தால், அதைத் தீர்ப்பதற்கு MOM உதவும். மேலும், வழங்கப்பட வேண்டிய இழப்பீடு தொடர்பாக ஒரு ஆணையை வழங்கும்.

**பயனுள்ள உதவிக் குறிப்பு**

**நீங்கள் குறுஞ்செய்தி வசதியைப் பயன்படுத்தி உங்களின் பணிக்காலக் காயக் கோரலின் நிலைமையை அறிந்துகொள்ள முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?**
**'96175993' என்ற எண்ணுக்கு CS<space>T<space>கோரல் குறிப்பு எண் என்று குறுஞ்செய்தி அனுப்புங்கள் உதாரணமாக, CS T W-2014010001**

### கேள்வி 6

**நான் ஒரு வெளிநாட்டுப் பணியாளர். எனது WICA கோரல் இன்னமும் செயல்முறையில் இருக்கும் வேளையில், எனது முதலாளி என்னை எனது தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்ப முடியுமா?**

நீங்கள் சிங்கப்பூரில் தங்கியிருப்பது MOM-க்குத் தேவையெனில், உங்களின் முதலாளி உங்களை உங்கள் தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்ப முடியாது.

அவர் உங்களைத் தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்லுமாறு வற்புறுத்தினால், நுழைவு சோதனைச்சாவடிகளில் உள்ள அதிகாரிகளிடம் புகார் தெரிவியுங்கள். அவர்கள் உங்களை MOM-யிடம் பரிந்துரைப்பார்கள்.




## நான் WICA-இன் கீழ் ஒரு குற்றம் புரிந்தால் என்ன நிகழும்?



**MOM உங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்.**

நீங்கள் ஒரு வெளிநாட்டுப் பணியாளராக இருந்தால், உங்களின் வேலை அனுமதிச்சீட்டு இரத்துசெய்யப்படும். நீங்கள் சிங்கப்பூரில் மீண்டும் பணிபுரிவதற்குத் திரும்பிவர அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

கூடுதலாக, மற்ற அபராதங்களும் உள்ளன:

| ஒரு மோசடியான கோரலைச் செய்தல் | அதிகாரிகளுக்குத் தவறான தகவல்களை வழங்குதல் |
|---|---|
| • $15,000 வரை அபராதம்; மற்றும்/அல்லது<br>• 12 மாதங்கள் வரை சிறைத்தண்டனை | • $5,000 வரை அபராதம்; மற்றும்/அல்லது<br>• 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை |

**WICA கோரல் ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு அல்லது பணிக்காலக் காய இழப்பீடு குறித்து மேலும் விவரங்களை அறிந்துகொள்வதற்கு உதவி தேவையா?**

http://www.mom.gov.sg/wic


Ministry of Manpower Services Centre
1500 Bendemeer Road
Singapore 339946


வேலை நேரங்கள்:
திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 8:00 மணி – மாலை 5:30 மணி
(வரிசையில் நிற்பதற்கான நுழைவுச்சீட்டுகள் மாலை 4.30 மணி வரை வழங்கப்படும்)


6438 5122



பிப்ரவரி 2017-இல் புதுப்பிக்கப்பட்டது

இந்த வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், அச்சிடப்படும் நேரத்தில் சரியானவையாகும். இந்த வழிகாட்டி, பணிக்காலக் காய இழப்பீடு (WIC) குறித்த அடிப்படைத் தகவல்களைப் பணியாளர்களுக்கு வழங்குகின்றது. மேலும் இது WIC சட்டத்தின் கீழ் அவர்களுக்கு உள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளின் ஒரு எளிமையான கண்ணோட்டத்தையும் வழங்குகிறது. ஒரு வழிகாட்டியாக, இந்தத் தகவல் சிற்றேடு எந்தச் சட்ட நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.  சந்தேகமிருந்தால், WIC சட்ட விதிகளைப் படித்து அறிந்துகொள்ள வேண்டும்.